செ.வெ.எண். 69 நாள் - 03.03.2021

நீலகிரி மாவட்டம், உதகை, மத்திய பேருந்து நிலையத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன் மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒளிப்பரப்பப்பட்ட குறும்படத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

---

நீலகிரி மாவட்டம், உதகை, மத்திய பேருந்து நிலையத்தில் இன்று (03.03.2021) செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன் மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒளிப்பரப்பப்பட்ட குறும்படத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து, பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :--

இந்திய தேர்தல் ஆணையம் தமிழகத்தில் ஒரே கட்டமாக 06.04.2021 அன்று சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என்ற அறிவிப்பினை வெளியிட்டது. இந்த அறிவிப்பு வந்ததுடன் உடனடியாக தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. மேலும் இளம் வாக்காளர்கள் மற்றும் வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில் இன்று செய்தி மக்கள் தொடர்புத்துறையின் அதிநவீன மின்னணு வீடியோ வாகனத்தின் மூலம் வாக்காளர்களுக்கு மற்றும் இளம் வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட குறும்படத்தினை ஒளிப்பரப்பி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் நமது மாவட்டத்திலுள்ள 3 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பகுதிகளிலும், இவ்வாகனத்தின் மூலம் வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. குறிப்பாக கடந்த தேர்தலின்போது, குறைவான வாக்குகள் பதிவான வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள பகுதிகளிலுள்ள வாக்காளர்களுக்கு, நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலில் 100% வாக்களிக்க வேண்டும் மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது.” என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், உதகை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/சார் ஆட்சியர் டாக்டர் மோனிகா ரானா இ.ஆ.ப., குன்னூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் / சார் ஆட்சியர் திரு.ரஞ்சித் சிங் இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.நி.சையத் முகம்மத், உதகை வட்டாட்சியர் திரு.குப்புராஜ், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு.ஒ.ர.மனோஜ் குமார் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்